பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

06 10 2025 7 15

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- கனமழை மற்றும் வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்டுள்ள நேபாளத்திற்குத் தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- மஹாராஷ்டிராவில் மழை வெள்ள பாதிப்பு குறித்து மாநில அரசிடமிருந்து அறிக்கை வரப்பெற்றதும் மத்திய நிதியுதவி விடுவிக்கப்படும் என்று உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.
- இந்தியக் கடற்படையின், இரண்டாவது நீர்மூழ்கி எதிர்ப்புக் கப்பலான Androth, இன்று நாட்டிற்கு அர்ப்பணிக்கப்படுகிறது.
- காஸாவில் பிடித்து வைக்கப்பட்டள்ள பிணைக் கைதிகள் விரைவில் விடுவிக்கப்படுவார்கள் என்று அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.
- Al Ain மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் அர்ஜுன் - ஹரிஹரன் அம்சகருணன் இணை பட்டம் வென்றது.

-- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

கனமழை மற்றும் வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்டுள்ள நேபாளத்திற்குத் தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், நேபாளத்தில் மழையால் ஏற்பட்டுள்ள உயிரிழப்புகள் மிகுந்த கவலையளிப்பதாக கூறியுள்ளார்.

இக்கட்டான இந்தத் தருணத்தில் அண்டை நாடு என்ற முறையில் நேபாள மக்களுக்கும், நேபாள அரசுக்கும் இந்தியா துணை நிற்கும் என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

மஹாராஷ்டிராவில் மழை வெள்ள பாதிப்பு குறித்து மாநில அரசிடமிருந்து அறிக்கை வரப்பெற்றதும் மத்திய நிதியுதவி விடுவிக்கப்படும் என்று உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

அஹில்யாநகர் மாவட்டத்திற்கு உட்பட்ட Loni-யில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், இம்மாநிலத்தில் பெய்துவரும் கனமழையால் பயிர்கள் பெருமளவு பாதிக்கப்பட்டிருப்பதாக குறிப்பிட்டார்.

இதன் காரணமாக விவசாய கடன் வசூல் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இம்மாநிலத்திற்கென நடப்பு நிதியாண்டில் ஒதுக்கப்பட்ட பேரிடர் நிவாரண நிதியான 3 ஆயிரத்து 132 கோடி ரூபாயில் ஆயிரத்து 631 கோடி ரூபாய் ஏற்கனவே விடுவிக்கப்பட்டிருப்பதையும் திரு. அமித் ஷா சுட்டிக்காட்டினார்.

<<<<>>>>

உலகளாவிய தேவைக்கேற்ப உற்பத்தியை அதிகரிப்பதென்ற அணுகுமுறையை இந்தியா பின்பற்றி வருவதாக வெளியுறவுத்துறை அமைச்சர் திரு.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில், கௌடில்யா பொருளாதார மாநாட்டில் பேசிய அவர், வர்த்தகம், போக்குவரத்து இணைப்பு வசதி மற்றும் வினியோக சங்கிலியை மேம்படுத்துவதன் மூலம் பல்வேறு சவால்களுக்கு தீர்வு காண நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகக் கூறினார்.

சமீபத்திய ஆண்டுகளில், போர்முறையின் தன்மை மாற்றமடைந்து வருவதை சுட்டிக்காட்டிய அவர், தற்போதைய போர்முறை, நேரடித் தொடர்பு இல்லாத தொழில்நுட்பம் சார்ந்ததாக உள்ளது என்றும் குறிப்பிட்டார்.

அரிய இயற்கை வளங்களைக் கைப்பற்றுவதற்கான மோதலாக மாறியிருப்பதாகவும் திரு. ஜெய்சங்கர் தெரிவித்தார்.

<<<<>>>>

மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு.பியூஷ்கோயல், கத்தாரில் இரண்டுநாள் பயணமாக, இன்று தோஹா செல்கிறார்.

அந்நாட்டு வர்த்தக அமைச்சருடன் இணைந்து, கத்தார் - இந்தியா கூட்டுக்குழு கூட்டத்திற்குத் தலைமை வகிக்கும் அவர், கூட்டத்தின் இடையே, கத்தார் தொழில் துறையினரையும் சந்தித்துப் பேசவுள்ளார்.

இதுகுறித்து, மத்திய வர்த்தக அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், கத்தார் நாட்டுடனான வர்த்தகம் மற்றும் முதலீட்டு வாய்ப்புகளுக்கு இந்தியா அதிக முக்கியத்துவம் அளித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

இந்தியக் கடற்படையின், இரண்டாவது நீர்மூழ்கி எதிர்ப்புக் கப்பலான Androth, இன்று நாட்டிற்கு அர்ப்பணிக்கப்படுகிறது.

விசாகப்பட்டினத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில், கடற்படையின் துணைத் தளபதி வைஸ் அட்மிரல் ராஜேஷ் Pendharkar பங்கேற்று, இக்கப்பலை, தேசப்பணியில் ஈடுபடுத்த உள்ளார்.

இந்தக் கப்பலின் சேவை தொடங்கப்படுவது, இந்தியக் கடற்படையின் திறன் அதிகரிப்பு மற்றும் உள்நாட்டுமயமாக்கலில், குறிப்பிடத்தக்க மைல்கல்லாக அமையும் என்று, பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

80 சதவீதம் உள்நாட்டுத் தொழில்நுட்பம் மற்றும் பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள இந்தக் கப்பல், கடலோரப் பகுதிகளிலும், அலைகளுக்கு இடையேயும், எதிரிகளின் நீர்மூழ்கிக் கப்பல் நடமாட்டத்தைக் கண்காணிக்கும் திறன் பெற்றது ஆகும்.

<<<<>>>>

கச்சா எண்ணெய் உற்பத்தியை, அடுத்த மாதம் முதல் ஒரு நாளைக்கு ஒரு லட்சத்து 37 ஆயிரம் பீப்பாய்களாக அதிகரிக்க, OPEC+ கூட்டமைப்பு முடிவு செய்துள்ளது.

எண்ணெய் ஏற்றுமதி நாடுகள், ரஷ்யா மற்றும் சிறிய அளவிலான எண்ணெய் உற்பத்தி நாடுகளை உறுப்பினராகக் கொண்ட இந்தக் கூட்டமைப்பு, இந்த ஆண்டிற்கான கச்சா எண்ணெய் உற்பத்தி இலக்கை, ஒரு நாளைக்கு 2 புள்ளி 6 மில்லியன் பீப்பாய்களாக அதிகரித்துள்ள நிலையில், இந்த புதிய முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த சில ஆண்டுகளாக, கச்சா எண்ணெய் உற்பத்தி குறைக்கப்பட்டு வந்த சூழலில், அமெரிக்கா ஏற்படுத்தியுள்ள போட்டியின் காரணமாக உருவாகியுள்ள சந்தை வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ளும் விதமாக, இந்த நடவடிக்கை இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

அஸ்ஸாம் மாநிலத்தின் போடோலேண்ட் பிராந்திய கவுன்சிலின் தலைமை நிர்வாகக்குழு உறுப்பினராக பொறுப்பேற்றுள்ள திரு. Hagrama Mohilary-க்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து பிரதமர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், திரு. Mohilary-யின் பதவிக்காலம் சிறப்பானதாக அமைய வாழ்த்துவதாக குறிப்பிட்டுள்ளார்.

போடோலேண்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு, தாமும், அஸ்ஸாம் அரசும் தொடர்ந்து உறுதுணையாக இருப்போம் என்று கூறியுள்ள பிரதமர், போடோ இயக்கத்தின் முன்னோடி உபேந்திரநாத் பிரம்மாவின் தொலைநோக்கு அம்சங்களை நிறைவேற்ற, அனைவரும் இணைந்து பணியாற்றுவோம் என்றும் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

சரக்கு மற்றும் சேவை வரி குறைப்பு காரணமாக, அனைத்து தரப்பினரும் பயனடைந்து வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இதன் காரணமாக, பொதுமக்களின் வாங்கும் திறன் அதிகரித்துள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதற்கிடையே, இந்த வரி குறைப்பு நடவடிக்கையால், வாகன உதிரி பாகங்களின் விலை குறைந்துள்ளதாக தமிழகத்தின் நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர்.

(சவுண்ட் பைட் - பயனாளிகள் - 59 செகண்ட்ஸ்)

<<<<>>>>

காஸாவில் ஹமாஸ் அமைப்பினரால் பிடித்து வைக்கப்பட்டள்ள பிணைக் கைதிகள் விரைவில் விடுவிக்கப்படுவார்கள் என்று அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

தாம் தெரிவித்த சமரச திட்டத்தின்படி ஹமாஸ் அமைப்பினர் இஸ்ரேல் அரசு பிரதிநிதிகளுடன் எகிப்தில் இன்று மறைமுகப் பேச்சுவார்த்தை நடத்த இருப்பதாக அவர் கூறியுள்ளார்.

காஸாவின் நிர்வாக பொறுப்பு பாலஸ்தீன அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்றும் அதிபர் திரு. ட்ரம்ப் வலியுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் உள்ள சவான் மான் சிங் மருத்துவமனையின் தீவிர சிகிச்சை பிரிவில் ஏற்பட்ட தீ விபத்தில் 6 பேர் உயிரிழந்தனர்.

இந்தப் பிரிவில் நேற்றிரவு ஏற்பட்ட மின்கசிவால் பற்றிய தீ மருத்துவமனையின் பிற பகுதிகளுக்கும் பரவியதன் காரணமாக புகைமூட்டத்தில் சிக்கி நோயாளிகள் உயிரிழந்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

<<<<>>>>

Al Ain மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் அர்ஜுன் - ஹரிஹரன் அம்சகருணன் இணை பட்டம் வென்றது.

ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை, 21-17, 21-18 என்ற செட் கணக்கில் இந்தோனேஷியாவின் Raymond Indra - Nikolaus இணையை வென்றது.

<<<<>>>>

புதுதில்லியில் நடைபெற்ற உலக பாரா தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா 6 தங்கம், 9 வெள்ளி, 7 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

<<<<>>>>

RIGA ஓபன் டேக்வாண்டோ போட்டியில் இந்தியாவின் Aman Kadyan தங்கப் பதக்கம் வென்றார்.

லாட்வியாவில் நடைபெற்ற இப்போட்டியின் ஆடவர் 58 கிலோ எடைப்பிரிவில் அவர் இப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.

<<<<>>>>

உலகக்கோப்பை மகளிர் கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் இந்தியா 88 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் டாஸ் வென்ற பாகிஸ்தான் அணி பந்துவீச தீர்மானித்ததையடுத்து முதலில் பேட் செய்த இந்திய அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 247 ரன் எடுத்தது.

248 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய பாகிஸ்தான் அணி, 43 ஓவரில் 159 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

<<<<>>>>

கான்பூரில் நடைபெற்ற ஆஸ்திரேலியா ஏ அணிக்கு எதிரான 3வது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா ஏ அணி 2 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

<<<<>>>>

நைஜீரியாவில் நடைபெற்ற பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியா 6 தங்கம், 5 வெள்ளி, 15 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

<<<<>>>>